அலுவலகங்கள் இருக்கின்றன. கீழக்கரையை நகராட்சியாக மாற்றியதைப்போல, இதையும் நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நகராட்சியாவதற்குரிய அந்தஸ்தைப் பெற வத்திராயிருப்பில் மக்கள் தொகையோ அல்லது வருமானமோ இல்லை. ஆகவே, தாமரைக்கனியின் ஆசை இப்போது கனியாக வாய்ப்பில்லை.

குடிசை மாற்றுப் பணிகள்.

*வினா எண் 689—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நடைபெற்றுவரும் குடிசைப் பகுதி முன்னேற்ற திட்டம் எதிர்பார்த்த அளவு வேகமாக செயல்படவில்லை என்று சமீபத்தில் இங்கு வந்திருந்த உலக வங்கி குழு சுட்டிக்காட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ)

விவர அறிக்கை *அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பொதுவாக குடிசைப் பகுதி முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் கூட, அதை நாம் மாற்றவேண்டிய நிலைமையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சென்னை நகருக்கு அதிகமான நபர்கள் வருவதைத் தடுப்பதற்காக— இம்மிகிரேஷன் முறை— அமல்படுத்தி, அதன் மூலம் கட்டுப்பாடு செய்து, இங்கேயுள்ள மக்களுக்கு வீட்டு வசதி செய்து விட்டு, மீண்டும் பிற மக்களுக்கு அந்த வசதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி குடிசைப் பகுதி மேம்பாடு திட்டம் பற்றியதாகும். இங்குள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பது என்னவென்றால் 1978–79-ல் 15,482 குடும்பங்கள் இருக்கும்

[*617ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது].

1979 ஏப்ரல் 11]

பகுதி மேம்பாடு செய்ய ரூ. 100 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். 1979–80-ல் 10,881 குடும்பங்கள் இருக்கும் பகுதி மேம்பாடு செய்ய ரூ. 150 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பியுள்ள கேள்வி உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வரும் குடிசைப் பகுதி முன்னேற்ற திட்டம் எதிர்பார்த்த அளவு வேகமாக செயல்படவில்லை என்று சமீபத்தில் இங்கு வந்திருந்த உலக வங்கிக் குழு சுட்டிக்காட்டியுள்ளதா என்பதாகும். அதற்கு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அந்த விவர அறிக்கையில், சில திட்டங்களை பல காரணங்களுக்காகக் கைவிட்டு விட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அதிலே மத்திய சர்க்காருக்கு உரிமையான சில நிலங்கள் இருக்கின்றன. அதை—அந்த நிலங்களைப் பெற இயலவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பெற இயலவில்லை என்பதால் கைவிடப்பட்டதா அல்லது உலக வங்கி சுட்டிக்காட்டிய காரணங்களால் கைவிடப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நாமெல்லாம் அதைக் கைவிட்டதைப் பார்த்துத் தான் உலக வங்கி தன்னுடைய கருத்தைச் சொன்னது. ஏன் விட்டு விட்டோம் என்பதற்கு 6 பிளஸ் 1=7 காரணங்கள் காண்பித்து இருக்கிறோம். அந்த 7 காரணங்களும் அச்சிடப்பெற்று வழங்கப்பெற்று இருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு உரிமையான நிலங்களை எடுப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அது குறித்து மத்திய அரசோடு பார்க்கவேண்டும், பேசவேண்டும். குமாரமங்கலம் பகுதி முன்னாள் ராணுவத்தினர்கள் இருக்கிறார்கள். அங்கே முன்னாள் ராணுவத்தினர் இல்லாதவர்களும் உள்ளே நுழைந்து விட்டார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் போது, மற்றவர்களை வெளியேற்றுவது முடியாது. வெளியேற்ற வேண்டும் என்று காரியம் எடுத்தால் மறுபடியும் ஊர்வலம் வரும். அவர்களை ஆதரிக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தந்திரமாக, டாக்ட்ஃபுல்லாக முடிவு செய்யவேண்டியிருக்கிறது. நிதானமாக, தந்திரமாக, ஒழுங்காக, சிறப்பாக செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, சில திட்டங்களைக் கைவிட்டு விட்டது பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்து இருப்பதாகச் சொன்னார்கள். லம் இம்ப்ரூவ்மெண்ட் செய்வதில் சில வேலைகள் கைவிட்டுவிடப்பட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் சரியாக, வேகமாக, எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு நடைபெறவில்லை என்ற குறையை உலக வங்கி எந்த அடிப்படையில் தெரிவித்தது? தன்னுடைய அறிக்கையில் அல்லது அவர்கள் பார்வை

யிட்டபோது அளித்த கருத்தின்போது சொல்லப்பட்டது. உலக வங்கி இதற்காக எவ்வளவு பண உதவி செய்தது? உதவி யிருக்கிற மொத்த தொகை எவ்வளவு? உதவி தருகிற காலத்தில் எந்தெந்த அடிப்படையில், எந்தெந்தக் கொள்கையின் அடிப்படையில் எவ்வளவு தரமுடியும் என்று கணக்கிடப் பெற்றது? கடைசியில் எவ்வளவு தொகை கொடுத்தார்கள்? அவர்கள் எதிர்பார்த்த அந்த முன்னேற்றம் ஏன் நடைபெற வில்லை, என்பதைதான் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அமைச்சர் அதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மொத்தப் பணம் எவ்வளவு என்பதற்கு இங்கே தகவல் இல்லை. 1978–79, 1979–80-க்கு எவ்வளவு செலவு செய்ய இருக்கிறோம் என்பதை முன்னாலேயே குறிப்பிட்டேன். என்னென்ன காரணங்களுக்காக தடைபட்டு இருக்கிறது என்பதை அச்சிட்டே கொடுத்து இருக்கிறேன். அதைப் படிக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எதிர் பார்க்கமாட்டார் என்று கருதுகிறேன்.

கோவையில் வீட்டுவசதித் திட்டங்கள்.

*வினா எண் 690—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை வீட்டுவசதி யூனிட் 1,232 வீடுகள் கட்ட திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காகும் செலவுத் தொகையாகிய ரூ. 2,92 கோடியில் நமது மாநில அரசின் பங்குத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை திட்டப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1,252 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டின் மொத்தத் தொகையில் மாநில அரசு 50 சதவிகிதம் அளிக்கிறது.

[முற்பகல் 10-00]

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, திட்டம் இடம்பெற்றுள்ளது என்றுதான் இன்னும் அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இந்த வகை அமைப்புத் திட்டத்தில் வீடு கட்டிக்கொள்வதற்காக ஏழை எளிய மக்கள் நிறைய பேர் வீடு இல்லாமல் காத்திருப்பதும் அமைச்சரவர்களுக்குத் தெரியும்.